# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :27 July 2025
கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்**
சி.ஆர்த்தி

**தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை**
பி.தீபாவதி

**கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு**
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

**உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்**
ந.ஸ்டாலின்

**தமிழ்த் திரை இசைப் பாடல்கள்**
கார்த்திக் க

**நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்**
ஜென்சி வை கி

**இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்**
சே. வனிதா

**Historical And Archaeological Impact Of Palayarai**
Dr.S.Neelavathy

**Chola's Temples As A Social Organization**
A Study - S. Mala

**A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple**
M. Amirthavalli


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# தமிழ்

# சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல் - ஓர் ஒப்பாய்வு

## *The social life of the pastoral people in the Sangam period's records and the pastoral lifestyle in the Geethari novel - a comparison*

***Author: S.Nirmala[1]*** *RG-22PHD0268*
*Full Time Research Scholar,*
*Orcid Id:0009-0009-0453-9672*
***Author: Dr. A. Maria Sebestian[2]***
*Assistant Professor, Department of Tamil,*
*School of Social Sciences and Languages,*
*VIT University, Vellore.*
*Orcid Id: 0009-0001-7269-6217*

***Abstract***
*In the pastoral lifestyles found in Sangam literature, if Kurinji refers to the pastoral hunting, then it can be understood that Mullai is centered on the pastoral life. It can be seen that the pastoral lifestyles have been recorded in literature since the Sangam period. The pastoral people are considered to be an important community. The nomadic life they lead, especially the experiences of the pastoralists, are depicted in detail in Su. Tamilchelvi's novel "Keethari". The novel highlights the traditional lifestyle based on nature and the involvement of the pastoralists in the pastoral profession. However, important changes are taking place in these lifestyles in contemporary times. This indicates the changes that have occurred in the old lifestyle based on nature. Although the traditions and customs of the pastoral community have changed over time, some adaptations still continue. This makes it clear that the pastoral community has not completely ignored their traditions. Therefore, the main objective of this article is to study the extent to which tradition and change are compatible.*
***Keywords:*** *Sangam period literature, shepherd social structure, sheep and cattle herding, Geetari novel, livelihood industries, traditional cuisine, customs, marriage.*
**கட்டுரையாளர்:** சே,நிர்மலா.[1]
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
**கட்டுரையாளர்:**முனைவர் அ மரிய.செபஸ்தியான்[2]
உதவிப்பேராசிரியர்,
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி,
வி,ஐ.டி பல்கலைக்கழகம்.
வேலூர்.

**ஆய்வுசுருக்கம்**

சங்க இலக்கியங்களில் காணப்படும் திணை வாழ்வியல்களில், குறிஞ்சி திணை வேட்டையைக் குறிக்கின்றதெனில், முல்லைத் திணை கால்நடை வாழ்க்கையை மையமாகக் கொண்டது என்பதை உணர முடிகிறது. கால்நடை வாழ்க்கை முறைகள் சங்கக் காலத்திலிருந்தே இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டிருப்பதை காணலாம். இடையர் மக்கள் முக்கியச் சமூகமாகவே கருதப்படுவர். இவர்கள் வாழும் நாடோடி வாழ்க்கையும், குறிப்பாக ஆட்டிடையர்களின் அனுபவங்கள், **சு.தமிழ்ச்செல்வியின் "கீதாரி" நாவலில்** விரிவாகச்

சித்தரிக்கப்படுகின்றன. இயற்கையைச் சார்ந்த பாரம்பரிய வாழ்க்கை முறையையும் மேய்ச்சல் தொழிலில் இடையர்கள் ஈடுபடுவதையும் நாவல் எடுத்துரைக்கிறது. ஆனால், சமகாலத்தில் இவ்வாழ்வியல் முறைகளில் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இயற்கை சார்ந்த பழைய வாழ்வியல் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் குறிக்கிறது. இடையர் சமூகத்தின் மரபுகள், பழக்கவழக்கங்கள் காலப்போக்கில் மாற்றம் கண்டாலும், சில தழுவல்கள் இன்னும் தொடர்கின்றன. இதனால், இடையர் சமூகத்தினர் தங்கள் மரபுகளை முழுமையாக புறக்கணிக்கவில்லை என்ற உண்மை தெளிவாகிறது. எனவே, மரபும், மாற்றமும் எந்த அளவில் இயைந்து வருகின்றன என்பது குறித்த ஆய்வே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாக அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

சங்கக் கால இலக்கியங்கள், இடையர் சமூக அமைப்பு, ஆட்டும் மாடும் மேய்க்கும் பணி, கீதாரி நாவல், வாழ்வாதாரத் தொழில்கள், பாரம்பரிய உணவியல், பழக்கவழக்கங்கள், மணமகிழ்வு.

**முன்னுரை**

மனித சமூகம் என்பது பல இனக்குழுக்களின் தனித்துவமான பண்பாடுகளைத் தாங்கிய ஒருங்கிணைந்த அமைப்பாகக் காணப்படுகிறது. தமிழர்களின் வாழ்வியல் முறைகள் மற்றும் சமூக அமைப்புகள் காலப்போக்கில் வழிமாற்றங்களும், புதிய நிலைகளையும் சந்தித்துள்ளன. சங்கக் காலத்திலிருந்தே திணைகள் வழியாக தமிழரின் வாழ்க்கை முறை விரிவாக இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளன. இந்த இலக்கியங்கள் சமூக அமைப்பின் சிறப்புமிக்கக் கூறுகளையும், அக்கால வாழ்க்கை நடைமுறைகளையும் நன்கு வெளிப்படுத்துகின்றன. அந்த அடிப்படையில், சங்க இலக்கியத்திலிருந்து தற்காலத்திற்கே உரிய **சு.தமிழ்ச்செல்வியின் கீதாரி நாவலில்** இடையர் சமூகத்தின் வாழ்க்கை முறை எவ்வாறு மாறிவந்துள்ளது என்பதைப் புரிந்துகொள்வது இன்றைய சூழலில் முக்கியத்துவம் பெறுகிறது. இன்றைய காலநிலை மாற்றங்கள் மற்றும் சமூகமாற்றங்களால், இடையர் சமூகத்தின் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இந்த ஆய்வு பதிவு செய்கிறது. இதன் மூலம், இடையர் மரபுகள் தொடர்ந்து நிலைத்து வந்துள்ளனவா அல்லது இன்றைய சூழலின் தாக்கத்தால் மாற்றமடைந்துள்ளனவா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

**இடையர்**

முல்லை நிலத்தில் வாழ்ந்த இனக்குழுவினர் இடையர் எனப்படுகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் காடுகளையே தங்கள் வாழ்விடமாகக் கொண்டிருந்தனர். அகநானூற்றுப் பாடல் 394-ல் "காடு உறை இடையன்" எனும் வரியில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இடையர்கள் ஆடுமாடுகளைக் காடுகளில் மேய்த்தல் பற்றிய விவரம் புறநானூற்றுப் பாடல் 230-இலும் காணப்படுகிறது. சங்க இலக்கியங்கள் ஒரே காலத்தில் எழுதப்பட்டவை அல்ல என அ. செல்வராசு கூறுகிறார். கலித்தொகை நூலில் இடையர்கள் தலைவர்களாக வருவது காணப்படுகிறது, ஆனால் மற்ற முல்லைத்திணைப் பாடல்களில் அவர்கள் தலைவர்களாக வருவது இல்லை என்பதைப் பீ. பெரியசாமி சுட்டிக்காட்டுகிறார். ‘‘கிடை’’ என்றால் கால்நடை கூட்டம், அதனை மேய்க்கும் நபர்கள் முதலில் ‘‘கிடையர்’’ என அழைக்கப்பட்டு, பின்னர் ‘‘இடையர்’’ என மாறினர் என்பது பேரா. சி. பாக்கியச் செல்வரதி அவர்களின் கூற்று. இதனூடாக, கால்நடை மேய்ப்பவர்களின் பண்பாட்டிலும் பெயரிடலிலும் காலத்தின் போக்கின்படி ஏற்பட்ட மாற்றங்களை நாம் உணரலாம்.

**இடையர் பெயர்க்காரணம்**

முல்லை நிலத்தில் வாழ்ந்த இனக்குழுவினர் "இடையர்கள்" என அழைக்கப்பட்டனர். சங்க இலக்கியங்களின் முழுப்பரப்பிலும், கால்நடை மேய்த்தலைக் குறிக்கும் வார்த்தைகள் போல, அண்டர், ஆயர், இடையர், கோவலர், பொதுவர், தொறுவர் ஆகிய சொற்கள் பலமுறை பயன்படுத்தப்பட்டுள்ளதை காணலாம். (பீ. பெரியசாமி)

**"ஆயர் வேட்டுவர் ஆடுஉ திணைப்பெயர்**

**ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே"**

**(தொல். அகத்திணை நூ.23)**

மேற்கூறிய தொல்காப்பிய உரையின் அடிப்படையில், "ஆயர்" என்பவர்கள் "இடையர்" என அழைக்கப்படுவது உறுதியாகிறது. சங்க இலக்கியங்கள் கூறும் படி, முல்லை நில மக்களின் வாழ்வியல் என்பது மேய்ச்சல் தொழிலும், தோட்ட வேளாண்மையும் ஆகியவற்றில் மையம் கொள்ளும் ஒரு சுயாதீன பொருளாதார அமைப்பை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது. இதில், செல்வச் சிறப்புடன் வாழ்ந்த உயர்சாதியினருக்கும், நாள்தோறும் உழைத்து வாழும் தாழ்வருக்கும் இடைநிலையைக் கொண்டவர்களாகவே இடையர் இருந்தனர் என **மா. துரை அரங்கசாமி** கூறுகிறார். இதேபோல், குறிஞ்சி நிலமும் மருத நிலமும் சந்திக்கும் இடமான முல்லை நிலத்தில் வாழ்ந்தவர்களாகவே இடையர் இருந்தனர் என சக்திசான் சுப்பிரமணியன் உள்ளிட்ட பலரும் தெரிவித்துள்ளார்.

**"முல்லையர், கோவலர், இடையர்**
**(சொல்லிய) வண்டர், தொறுவர், கோவிந்தர்**
**அண்டர், கோபலர், ஆயர், அமுதர் என்று**
**இங்கு இவை முல்லை நிலத்துவர் பெயரே"**

**(திவாகார நிகண்டு, ப.16)**

திவாகாரம் மற்றும் நிகண்டுவில் கால்நடை மேய்ப்பவர்களைக் குறிக்கும் பெயர்கள் இடம் பெற்றிருந்தாலும், பிற்காலத்தில் அவர்கள் அம்பலக்காரர், மந்தடி, மந்தரி, முக்குந்தர், ரெட்டி, அண்டர், ஆவியர், குறும்பர், பூமியர், வேளிர் போன்ற பல்வேறு பட்டப்பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர் என்று வில்லிபுரம் மகேஸ்வரன் கூறுகிறார். சங்க இலக்கியமான முல்லைக்கலியில் இடம்பெறும் பாத்திரங்கள் ஆயர்குடியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இந்தக் கதாபாத்திரங்களில், எருமைகளை வளர்ப்பவர்கள் **கோட்டினத்தார்**, பசுவைப் பராமரிப்பவர்கள் **கோவினத்தார்**, ஆடுகளை வளர்ப்பவர்கள் **ஆட்டினத்தார்** அல்லது **புல்லித்தார்** என மூன்று வகையான ஆயர் இனக்குழுக்கள் இருப்பதைக் **கலித்தொகை**யின் (கலித் பா-103, 33-37-47) பாடல்கள் மூலம் அறிய முடிகிறது. இடையர்கள் நிலத்துடனும், கால்நடைகளுடனும் இணைந்த வாழ்வியலை மட்டும் அவர்கள் ஆயர்குடிக்கே உரிய தனித்துவத்தையும் வெளிப்படுத்துகின்றனர் என்று **பெ. கபிலர்** கூறுகிறார். சமூக மற்றும் பொருளாதாரச் சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாகவே இடையர்களின் பெயர்களும் மாறியுள்ளதாகப் பலரும் கூறுகின்றனர். இதனாலேயே இடையர் இனக்குழுவினர் காலப்போக்கில் பல பரிணாம வளர்ச்சிகளை அனுபவித்து, பல புதிய அடையாளங்களை ஏற்கின்றனர் என்பது தெளிவாகிறது.

**நிலையற்ற இடம்பெயர்ந்த வாழ்வியல்**

சங்க இலக்கியங்களில் இடையர்கள் இடம் பெயர்ந்த வாழ்வை மேற்கொண்டதை பற்றி நெடுநல்வாடை இலக்கியத்தில் காணமுடிகிறது.

**"பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென**

**ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்**

**புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்**

**நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ**

**மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்"  (நெடு.5)**

இந்தப் பாடலில், கோவலர்கள் தங்கள் மாடுகளை வேறு நிலங்களில் மேயவிட்டுக்கொண்டு வேதனையுடன் புலம்புவதை மற்றும் பருவ மாற்றத்தால் வீசும் வாடைக்காற்றினால் நடுங்குவதை உணரலாம். இதனூடாகவே, அவர்கள் மேய்ச்சலுக்காக இடம் பெயர்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. மேலும், இடையர் இனத்தின் ஒரு பிரிவான புல்லினத்தவர், காலத்திற்கேற்ப தங்களை மாற்றிக்கொண்ட இடையர்களின் நாடோடி வாழ்க்கையைப் பற்றியும், ஆட்டைக் குடிகளைச் சேர்ந்த இடையர்களின் வாழ்வியலை இயல்பாகப் பதிவு செய்துள்ளதையும் **கீதாரி** நாவலின் மூலம் அறியலாம். **"ஊர்களின் வயல்காடுகளிலும் கோட்டங்களிலும் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் இவர்கள் மழைக்காலத்துக்கு மட்டும் மன்னாரத்திற்கு வந்துவிடுவார்கள்.ஆடி மாதத்தில் ஆற்றில் தண்ணீர் வந்துவிட்டாலே ஆடுமேய்க்கும் கீதாரிகளுக்கு ஊர்களில் ஆடு மேய்க்க முடியாமல் போய்விடும். வழக்கமாய் ஆடுகள் மேயும் வயல்காடு கொட்டகமெங்கும் நடவு நட்டுவிடுவார்கள். ஆடுகளை மேய்க்கவும் பட்டி போடவும் இடமில்லாமு போய்விடும் (கீதாரி, ப.30), ஊர் ஊராய் ஆட்டோடு திரிந்து பிழைப்பு நடத்தும் கீதாரி கூட்டத்தினர்" (கீதாரி, ப.40)** இந்நாவலின் மூலம் இடையர்கள் தங்களுக்கென ஓர் இருப்பிடம் இருந்தபோதிலும், வாழ்க்கைச் சூழ்நிலை, உறவுகள் மற்றும் தொழில் காரணமாக நாடோடியாக இடம் பெயர்ந்துள்ளதை அறிய முடிகிறது.

**உணவு பழக்கம்**

நிலம் அடிப்படையாகக் கொண்டு தமிழர் வாழ்வியல் திணைகள் என்ற வகைப்பாடு மூலம் விளக்கப்படுகிறது. ஒவ்வொரு திணையிலும் வாழும் உயிரினங்களும் அவற்றின் உணவு வழக்கங்களும் தனித்தன்மை உடையவை. குறிஞ்சியில் தோன்றிய புன்புல விவசாயம், காலப்போக்கில் முல்லை தாண்டி மருத நிலத்துக்கு விரிந்து நீர்ப்பாசன வசதியுடன் செழிப்பான விவசாயமாக வளர்ந்தது. இதன் மூலம், ஒரு திணையில் உருவான வாழ்க்கை அமைப்புகள் மற்ற திணைகளிலும் பரவி, அதன் அடையாளங்களை இழக்காமல் தன்னைத் தக்கவைத்துக் கொண்டன என்பதைக் **பக்தவத்சல பாரதி** தமது ஆய்வுகளில் சுட்டிக்காட்டுகிறார். இது தமிழர் பாரம்பரிய வாழ்வியலின் தொடர்ச்சியையும், திணைகளுக்கிடையேயான இயற்கைச் செயல்முறைகளின் இணைப்பையும் வெளிப்படுத்துகிறது.

**"பாலொடு வந்து கூழொடு பெயரும்**

**யாடுடை இடைமகன் சென்னி"  (குறு,பா-221)**

இடையர்களின் உணவுபழக்கம் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களிலும், நவீன நாவல்களிலும் விளங்குகின்றன. **பெரும்பாணாற்றுப்படை** (167—168, 192—197) போன்ற

பாடல்களில், இடையர்கள் சோற்றில் பால் ஊற்றி சாப்பிட்டதுடன், அவரை விதை, பருப்பு, வரகரிசி ஆகியவற்றைச் சேர்த்து உண்டனர் என்பதையும் காணமுடிகிறது. ‘‘பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவீர்’’ **(மலை, பா—147)** என்ற பாடல், நெய்சோற்றுடன் இறைச்சியும் உண்டனர் என்பதை உணர்த்துகிறது. ஊர் ஊராக அலைந்து வாழும் இடையர்கள், தினமும் சோறைத் தான் உணவாகக் கொண்டு இருப்பதோடு, இரவில் சுடு சோறும் உப்புக்கண்டம் குழம்பும், காலையில் பழையசோறு அல்லது தெளிவுத்தண்ணீரும் உணவாகும் எனக் குறிப்பிடப்படுகிறது **(கீதாரி, பக்—13).** மழை, வெயில், பனி என எல்லாப் பருவங்களிலும் இதே உணவுமுறை தொடர்கிறது. மேலும், ஆடுகள் இறந்தால் அதன் இறைச்சியை உப்புடன் பாறைகளில் காயவைத்துச் சேமிப்பதும் ஒரு வழக்கமாக உள்ளதாகவும் **(கீதாரி, பக்—155)** கூறப்பட்டுள்ளது. இவையெல்லாம் இடையர் சமூகத்தின் உணவுபழக்கத்தையும் அவர்கள் வாழும் சூழ்நிலைக்கேற்ப மாறாமல் நிலைத்திருப்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

**இடையர் தோற்றமும் வாழ்வியல் நடைமுறையும்**

இடையர்கள், உறியுடன் தீக்கடைக்கோலை பாதுகாப்பாக வைத்திருக்கத் தோலால் செய்யப்பட்ட பையைப் பயன்படுத்தினார்கள். மேலும், தங்களுடைய கால்நடைகளின் மூலம் கிடைக்கும் பொருட்களை விற்பனை செய்துள்ளனர் என்பதையும், நற்றிணை பாடல்கள் மூலம் நமக்குத் தெரிந்துகொள்ளமுடிகிறது. இடையர் வாழ்க்கையில் தொழில்சார் அனுபவங்களும், அவற்றைச் சுற்றியுள்ள உடைமைப் பயன்பாடுகளும் எவ்வாறு இருந்தன என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

**“ஞெலி கோல் கலப்பை அதளொடு சுருக்கி**

**பறிப் புறத்து இட்ட பால் நொடை இடையன்”**

**(நற்றிணை பா.142)**

இப்பாடலில், கையில் பலம் வாய்ந்த காலிட்டுப் பின்னிய மென்மையான உறியுடன், தீக்கடைக்கோல் போன்ற கருவிகளை தோலால் செய்யப்பட்ட பையில் வைத்து, அதனைச் சுருக்கி பனையோலைப் பாயோடு முதுகில் கட்டிக்கொண்டு பாலை விற்பனை செய்து செல்லும் இடையனின் உருவமும், அவர்களது பால் விற்றல் பற்றிய தகவலும் வெளிப்படுகிறது. இதேபோல், **கீதாரி நாவலில் இடையர்களுக்குக் கிடைக்கூலி பணமாகவோ, தானியமாகவோ அல்லது ஆட்டுகளின் புழுக்கையாகவோ வழங்கப்படுவதாகக் காணலாம். அந்தத் தானியத்தை அவர்கள் உணவாகப் பயன்படுத்தி, புழுக்கையை விற்றுப் பணமாக மாற்றுவது (கீதாரி — பக்: 35, 153)** மூலமாக, சங்ககாலத்தில் காணப்படாத பொருளாதாரப் பரிமாற்றம், இன்றைய சூழ்நிலை உருவாக்கிய மாற்றமாக அமைந்துள்ளது என்பதும் தெரிகிறது. மேலும், ஆடுகளை பாலை நிலப் பகுதியில் மேய்த்துள்ளனர் என்பதை நற்றிணை பாடல் மூலம் பரல் நிரம்பிய பாலை நிலத்தில் வளர்ந்து வீழ்ந்த சிச்சிலிப் பறவை போன்ற தலையையுடைய கள்ளியின் மேல் படர்ந்த முல்லையின் நறுமலருடன் கூடிய தலையையுடைய யாட்டின் தொகுதியை மேய்க்க அழகும் வலிமையும் கொண்ட இடையன் செல்கிறான் என்பதை இது வெளிப்படுத்துகிறது **(நற்றிணை பா.169).** மேலும், கார்கால நள்ளிரவில், தாம்புக் கயிறு கட்டிய உறி, பானை ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, தீக்கடைக் கோலை காலுடன் சேர்த்தபடி, தனியே செம்மறி ஆட்டைக் காப்பதற்காக நின்றுள்ளான். அந்தக் கோலினால் தீ ஏற்றி, வாயை மடித்துச் சீழ்க்கை ஒலியை எழுப்புகிறான். அந்தச் சீழ்க்கை ஒலிக்கு பயந்து ஆட்டுக்குட்டியைப் பிடிக்க வந்த குள்ளநரி ஓடுகிறதெனும் காட்சியை அகநானூறு

**(அகம். 274:7-8)** எடுத்துரைக்கிறது. இவ்வாறு, இடையர்கள் வலிமை மிக்கவர்களாகவும், தங்களது ஆடுமந்தையைப் பாதுகாப்பதற்காக விழிப்புடன் செயல்பட்டவர்களாகவும் இருந்ததை உணர்த்துகிறது.

செம்மறியாடும் வெள்ளாடும் ஆட்டிடையர்களால் பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டன. இவர்கள், அந்த ஆட்டினங்களை மேய்ப்பதற்காக மேய்ச்சலிடங்களுக்கு ஓட்டிச் சென்று மேயச்செய்வர். ஆடுகளை ஓட்டும் வேளையில், வாயை மடித்துச் சீழ்க்கையொலி எழுப்புவதால், இவர்கள் “மடிவாய் கோவலர்” என்றும் “மடிவாய் இடையன்” என்றும் அழைக்கப்படுகின்றனர் **(க. கவிதா, 2024)**. ஆடுகள் சிதறாமல், மற்றவர்களது ஆட்டுத் தொகுதியுடன் கலந்துவிடாமல் பாதுகாப்பதற்காக வீளை என்ற ஒலியை வாயைக் குவித்துப் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மேலும், தங்களது ஆடுகளை ஒரே இடத்தில் திரட்டுவதற்காகவும், அந்தச் சீழ்க்கையொலியை வாயை மடித்து எழுப்பினர் என்பதையும் இச்சிறப்பியல்கள் எடுத்துரைக்கின்றன.

**“காடு உறை இடையன் யாடு தலைப்பெயர்க்கும்**
**மடி விடு வீளை வெரீஇ, குறு முயல்” (அகம்.394:13-14)**

தோற்பையில் தீக்கோல் உள்ளிட்ட கருவிகளை வைத்து, அதை ஒரு புறம் தூக்கிக்கொண்டு ஆட்டிடையன் செல்வதையும், கார்காலத்தில் வெள்ளம் காரணமாகத் தன் ஆட்டினங்களை மேட்டு நிலத்துக்கு ஓட்டிச் செல்லுவதை நெடுநல்வாடை (5) குறிப்பிடுகிறது. **“கடலுக்கும் ஓடவுக்கும் இடையில் நீண்ட மேட்டு நிலமாக இருக்கும் மன்னாரத்தில் தான் ஆடுகளை மேய்த்துக்கொண்டு இவர்கள் தங்கியிருக்கின்றார்கள். (கீதாரி, ப-30)** கூறுகிறது. தொடர்ச்சியாகப் பெய்யும் மழையில் நனைந்தவாறு வாழ்ந்தனர் என்றும் **நற்றிணை (142:15)** தெரிவிக்கிறது. மேய்ச்சலுக்குச் செல்லும் முன் குட்டிகளைக் குடை போன்ற கூண்டுகளில் தனியாக அடைத்து, தழைக்குலைகளைக் கட்டிச் உணவாகவிட்டுப் பராமரித்தனர் “**ஆடு நின்ற இடமெல்லாம் மழை நாட்களில் காயாத தரையில் கிடைக்கும் ஈரப் புழுக்கையைக் கூட்டி குவிப்பது சிரம்மாக இருக்குமென்பதால் சற்று நேரம் தரையும் புழுக்கையும் உலரட்டுமென்று போட்டு வைத்துவிடுவார்கள்” (கீதாரி.ப-161)** என்பதை விளக்குகிறது. **“ஆடுகளை மேய்த்து வளர்த்து ஆடுகள் போடும் குட்டிகளோடு அவற்றை மறு வருடம் ஆட்டுக்காரரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அதுவரை ஆடுகள் போடும் புழுக்கை மட்டுமே இவர்களுக்கு சொந்தம்” (கீதாரி.ப-166)** என்று நாவல் கூறுகிறது. மேலும், "கிடை" என்றே அழைக்கப்படும் இடத்திற்கு தனிச்சட்டங்கள் இருந்ததோடு, அவற்றை முறைப்படுத்தும் விதத்தில் "வட்டம்" அமைத்து, கிடைக்காரர்கள் அந்தச் சட்டங்களை கடைப்பிடித்தனர் என்றும், கிடைக்காரர்களுக்கே உரிய தனிமொழி உண்டென்பதும், ஆட்டின் நிறத்தின் அடிப்படையில் பங்கு பகிர்ந்துகொள்வதும் கிடை வழி மரபாக இருந்து வந்ததாக **கி. ராஜநாராயணன்** கூறுகிறார். இத்தகவலை அகநானூறு பாடல் மூலம் உறுதிப்படுத்தலாம். இடையர்கள் வயலில் கிடை கட்டி காவலாக இருப்பதும், பாம்புகள் நடுங்கும் அளவிற்கு இடியிடிக்கும் நள்ளிரவிலும் அவ்விடத்தில் தங்கி காவலாற்றுவதும், தெம்மாங்கு பாடுவதன் மூலம் கால் வலியை மறந்து, தூக்கத்தை தவிர்த்து ஆடுகளை மேய்க்கும் பணியிலும், காவலிலும் கவனம் செலுத்துவதேயாகும். இடையர் வாழ்வியல், தொழில்நுட்பம், நிலச்சார்பு, இசை மரபு எனப் பல பரிமாணங்களைக் கொண்ட ஒரு சமூக வாழ்திறனைக் காட்டுகிறது.

**“சந்திர்ரே சூரியரே/ சாதிப்பகவானே**
**இந்திரா நோக்கியல்லோ/ எடுத்தனதே சிறு தெம்மாங்கே”**

**என்று பாட, அதற்கு எதிர்பாட்டாக**

*"பாட்டுக்குப் பாட்டெடுப்பேன்-ஓம்*
*பாட்டனயும் தோக்கடிப்பேன்*
*எதிர் பாட்டு படிக்கலேன்ன*
*ஏணிவச்சி பல்லொடொப்பேன்" **(கீதாரி, ப.118)***

இடையர் சமூகத்தில் ஆண்கள் தான் முக்கியமாக பகலில் ஆடுகளை மேய்ப்பதும், இரவில் அவற்றை கிடையில் அடைத்து தூங்காமல் காவல் காப்பதும் செய்துவருகின்றனர். கிடைகள் அமைக்கப்படுவதற்கான நில உரிமையாளர்களின் நோக்கம், ஆடுகளிடமிருந்து பெறப்படும் மூத்திரம் மற்றும் புழுக்கையை உரமாக பயன்படுத்துவதன் மூலம் வயலைச் சீராக்குவதாகும். எனவே, வயலில் மேய்ச்சல் உள்ள காலத்தில் அல்லது நில உரிமையாளர் விருப்பம் உள்ளவரை அந்த இடத்தில் கிடை தொடரும். பெரும்பாலும் மேய்ச்சல் முடிந்தவுடன், இடையர்கள் வேறு நிலத்துக்கோ அல்லது ஊர்களுக்கோ இடம் பெயர்ந்து கிடைப்போடுவது வழக்கமாகும் **(கீதாரி, ப.120)**. இடையர் இனத்தின் வாழ்க்கைமுறை, அவர்கள் சந்திக்கும் கஷ்டங்கள், தீக்கோலையால் ஏற்பட்ட தழும்புகள், மழையில் நனைந்தபடி நின்று இரவில் காவல் செய்வதுபோன்ற நிலைகள் போன்றவை நம்மறிந்து கொள்ளமுடிகின்றன.

**வாழ்வாதாரங்கள்**

இடையர் இன மக்கள் மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்டு, அதை பராமரித்து வந்ததோடு, அதன் பயனாக பெறப்படும் பொருட்களை வேறு நிலங்களுக்கு கொண்டு சென்று விற்பனைச் செய்துவந்தனர். முல்லை நிலத்திலோ இடையர்கள் பசுக்களையும் கன்றுகளையும் காட்டில் மேய்த்து, அந்த பசுக்களின் பாலை (பால்) விற்று அதற்குப் பதிலாக உணவாகத் தேவையான தானியங்களைப் பெற்றுச் செல்வதும் அவர்களுடைய வழக்கமாக இருந்தது **(பால் நொடை இடையன், நற்.142)**. இடையர் சமூகத்தில் பெண்கள் விடியற்காலையில் பறவைகளின் ஒலி எழுப்பும் தருணத்தில் தயிரைக் கடையும் பணியில் ஈடுபட்டு, அதிலிருந்து வெண்ணெயையும், மோரையும் பிரித்துத் தயாரிக்கும் பணியை செய்து வந்தனர். தயாரிக்கப்படும் புதிய மோரைப் பெண்கள் தனியாக சுமந்து சென்று விற்ற பழக்கமும் இருந்தது என்பதை ***பெரும்பாணாற்றுப்படை (பெரும்.162-164)*** என்னும் பாடலின் வழியே அறிய முடிகிறது. மோரைக் கொண்டு விற்பனை செய்யச் செல்லும் ஆயர் மகள்களின் செயற்பாடு, சிலப்பதிகாரத்தில் "அளை விலை உணவின் ஆய்ச்சியர்" எனப்படும் பெண்கள் வழக்குடன் காணப்படுகின்றன. **(சிலம்பதிகாரம், 13ம் காண்டம், 3—4)**. அவர்களின் வாழ்வியல் நெறிகளையும், பொருளாதார முறைகளையும் வெளிப்படுத்துகிறது. இதனையே

***"மாங்காய் நறுங் காடி கூட்டுவோம், யாங்கும்" (கலித்தொகை.109)***

இப்பாடல் வரியில் ஆயர் மகள் மோர் விற்றதோடு, மாங்காய் ஊறுகாயும் விற்றதை நாம் காணலாம். மேலும், பாலை விற்றதையும் **(நற்.142)**, மலர்களையும் விற்றதையும் **(நற்.97)** குறிப்பதாகும். இதன்மூலம், இடையர்கள் மேய்ச்சல் தொழிலுடன் வேளாண்மையையும் இணைத்தே மேற்கொண்டிருந்ததை நற்றிணை **(நற்.121)** பாடலில் காணக்கூடிய "விதையா" மற்றும் "முதையல்" என்ற சொற்கள் மூலம் அறிய முடிகிறது. கூடுதலாக, நற்றிணை (266, 289) மற்றும் அகநானூறு (194, 394) ஆகிய பாடல்களில் இடையர்கள் வேளாண்மையில் ஈடுபட்டிருந்ததையும் காணலாம். அவர்கள் வாழ்க்கையில் பசுமை வளர்ப்பு மற்றும் விவசாயம் செய்தமையைத் தெளிவாக காட்டுகிறது. சிறுதானியங்கள் களையெடுத்தல், தானியக் கதிர்களை எருமைகள் கொண்டு போரடித்தல் ஆகிய விவசாய நடவடிக்கைகள் குறித்து **சி. கணேசையர்**

கூறுவதையும் காணலாம். இன்று வரும் புதினங்களில், வேளாண்மை மற்றும் ஆடுமாடுகள் வளர்ப்பு போன்ற பாரம்பரிய தொழில்கள் சிறிது சிறிதாக குறைந்துவருவதையும், இவ்வகைக் கடினமான உழைப்பிலிருந்து மக்கள் விலக முனைவதை ***(சு. தமிழ்ச்செல்வி)*** நம் கவனத்திற்கு கொண்டுவருகின்றன. மேலும், வேளாண்மைக்கு ஏந்திரங்கள் வந்தபோதும், மாடுகளைப் பெரும்பாலும் அறுப்புக்காக ஏற்றுமதி செய்வதும், அவற்றை திருடி சந்தையில் விற்பதும் கீதாரி புதினத்தில் ***(ப. இந்திரா)*** பதிவாகியுள்ளதை நம்மால் காண முடிகிறது. இதன் மூலம் சங்க இலக்கியங்களில் இடையர்கள் மேய்ச்சல் மட்டுமல்லாமல் வேளாண்மையிலும் திறமையாக செயல்பட்டதையும், இடையர் குலப்பெண்களின் தொழிலையும் காணக்கூடியதோடு, சமகால இலக்கியங்கள் வழியாக அவர்கள் வாழ்க்கைமுறையில் ஏற்பட்ட மாற்றத்தையும் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது.

***மணமகிழ்வு***

மணமகிழ்வு என்றால் திருமணமாகும் "மனிதனின் மனம் ஒருவரை நோக்கி ஈர்க்கப்படுவதையும், அதை ஒரு நிறுவன அமைப்பிற்குள் சட்டபூர்வமாக நிறைவு செய்யும் முறையாகும்" எனப் ***பக்தவத்சலம்*** கூறுகிறார். குடும்பம் என்பது "இரத்த உறவை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் தலைமுறையினரைக் கொண்ட சிறிய சமூக அமைப்பாகும்" எனச் சம்னர் மற்றும் கெல்லர் கூறுகிறார்கள் ***(சா. சாவித்ரி)***. இனக்குழு வாழ்க்கையிலிருந்து தாய்வழி சமூகமாகத் தொடங்கி, பின்னர் தந்தை வழி சமூகமாக நிலைபெற்ற போது, அதனைத் தொடர்ந்து இடையர் சமூகத்தில் திருமணமுறைகளும், குடும்ப அமைப்புகளும் பல விதமாக மாறியிருப்பதைக் காணலாம். கலித்தொகையில், தன்நிலத்தைச் சார்ந்த பழக்க வழக்கின்படி மணமகனை ஒரு சடங்கின் வாயிலாக அடையாளம் காண்பதும், ஏறுதழுவுதல் ஒரு வீரவிளையாட்டுபோல் தோன்றினாலும், அது புறமண உறவுகளைத் தடுக்கும் ஒரு முறையாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. அதேசமயம், இடையர் சமூகத்தில் "தகுதி காண் திருமணம்" *(Probationary Marriage)* எனப்படும் ஒரு தனிச்சிறப்பான திருமணமுறையும் நிலவியதை ***கோ. சதீஸ்*** குறிப்பிடுகிறார். ஆயர்மகன் ஆயர்மகளை விரும்பும் நிலையில், அதேபோல் ஆயர்மகளும் அவனை விரும்பும் சூழ்நிலையிலும், இவர்களின் காதலில் தாயின் நோவுக்கோ வருத்தத்திற்கோ இடமின்றி அமைந்திருக்கின்றது என்பதைக் ***கலித்தொகை (கலி.107)*** குறிப்பிடுகிறது. மேலும், ஆயர்மகள் இடையர் சமூகத்தின் செயல்பாடுகள் மற்றும் அவர்களின் திறமைகளை நன்கு புரிந்தவராகவே இருப்பதை ***முல்லைக் கலியில்*** காணமுடிகிறது.

**"ஆயர் எமரானால் ஆய்த்தியேம் யாம் மிகக்**

**காயாம்பூங் கண்ணிக் கருந்துவர் ஆடையை"**

***(முல்லைக்கலி.108)***

முல்லைத் திணையில் திருமணம், குடும்ப சூழ்நிலைகள் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. திருமண நாளில் இல்லம் அழகுபடுத்தப்படுவது, புதுமணல் பரப்பி செம்மண்ணால் பூசுவது ***கலித்தொகையில் (பா.114)*** காணப்படுகிறது. முல்லைப் பகுதியில் நடைபெறும் திருமண நிலைமை ***அகநானூறு (பா.394)*** பாடலில் விளக்கப்பட்டுள்ளது. திருமண நாளில் செம்மறி ஆட்டின் பாலைத் தயிராக்கி, வரகு அரிசி, ஈசல் சேர்த்து சமைக்கின்றனர். அந்த இனிய புளிப்பான சூடான சோற்றில் பசுவெண்ணெய் ஊற்றி உருகவைத்து உண்ணுகின்றனர். மணமகன் உண்பதற்கு மணமகள் பால்சோற்றைத் தொட்டு வழங்குவது வழக்கம். புதிய உண்கலம் கொண்டு வருவது, அவள் அந்த வீட்டில் சமைக்கும் உரிமையைப் பெறுவதைக் குறிக்கிறது. திருமணச் சடங்குகள் வீட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் அறிகுறியாக அமைகின்றன. ஆட்டிடையர் திருமண முறையில் சித்தப்பா திருமணமும், அண்ணன் இறந்தால் அவனது

மனைவியைத் தம்பி மணம் செய்வதும் வழக்கமாகும். மாப்பிள்ளை வர முடியாத சூழலில், தடிக்கம்பை மாப்பிள்ளையென கருதி திருமணம் நடத்தும் பழக்கமும் நிலவுகிறது. திருமண சீதனமாக ஆடுகள், புலங்கு பொருட்கள், மளிகை சாமான்கள் வழங்கப்படுவது **கீதாரி** நாவலில் **(பா.98, 100, 101, 131, 96)** குறிப்பிடப்பட்டுள்ளது. இடையர் திருமணம் இனக்குழு ஒப்புதலுடன் நடைபெறும் சமூக நடத்தை முறையாக அமைகிறது. அந்த திருமணம் வீரச்செயலாகவும், வீரவிளையாட்டின் ஒரு கூறாகவும் கருதப்படுகிறது. இல்லம் சுத்தப்படுத்துதல், உணவளித்தல் போன்ற சடங்குகள் திருமண நிகழ்வின் பகுதியாகும். இவ்வாறு, காலச்சூழலின் தாக்கத்தால் இடையர் திருமண முறை மாற்றமடைந்து வந்ததைக் காணலாம்.

**முடிவுரை**

இடையர் மக்களின் பெயர்கள் காலத்திற்கேற்ப மாற்றமடைந்துவருவது காணப்படுகிறது. கால்நடைக் கூட்டங்களை தங்கவைத்து பாதுகாத்தும், கிடைப்போட வாழத் தொடங்கியதும், தனித்துவ வாழ்வியல் கொண்டவர்களாக இடையர்கள் உருவாகினர். அவர்கள் பொருளாதார தேவையை பூர்த்தி செய்ய ஆடுமாடுகளை மேய்த்து, தனி பண்பாடு கொண்ட சமூகமாகவே விளங்குகின்றனர். இடையர் இனக்குழு காலப்போக்கில் பரிணாம வளர்ச்சி அடைந்து, புதுப் பெயர்கள் மற்றும் அடையாளங்களை பெற்றிருக்கின்றனர். இடையர்கள் தங்களுக்கென இருப்பிடம் இருந்தாலும், வாழ்வியல் சூழ்நிலை, உறவுகள் மற்றும் தொழிலின் தேவை காரணமாக நாடோடியாகப் புலம்பெயர்ந்துள்ளனர். அவர்களின் உணவுமுறைகள் சூழலுக்கேற்ப அமைந்து, காலப்போக்கிலும் மாற்றமின்றி தொடர்ந்துள்ளன. தீக்கோலையால் உருவான உடல் தழும்புகள், மழையில் நனைந்து இரவில் காவல் புரியும் செயல்கள் ஆகியவை அவர்களின் கடின வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன. இவ்வாறு **கீதாரி** நாவலின் வழியாக இடையர் மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாட்டு மாறுதல், மற்றும் சமூக நிலைமாற்றங்களை தெளிவாக அறிந்துகொள்ளமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. **சு. தமிழ்ச்செல்வி,கீதாரி நாவல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்** (pvt) ltd, **சென்னை 2008.**
2. **மேலது, ப-30.**
3. **மேலது, ப-35.**
4. **மேலது, ப-13.**
5. **மேலது, ப-40.**
6. **மேலது,ப-115.**
7. **மேலது, ப-153.**
8. **மேலது, ப-161.**
9. **மேலது, ப-166.**
10. **மேலது, ப-118.**
11. **மேலது, ப-120.**
12. **மேலது, ப-98.**
13. **மேலது, ப-100.**

14. மேலது, ப-101.

15. மேலது, ப-131.

16. மேலது, ப-96.

17. செல்வராசு அ, சங்க இலக்கியத்தில் குடிமக்களும் தலைமக்களும், பக். 3-4

18. வில்லிபுரம் மகேஸ்வரன், சோழர் காலத்துக் கோயிலும் சமூகமும் ப.141-142.

19. பக்தவத்சலம், பண்பாட்டு மானுடவியல், பக்-379.

20. சி.கணேசையர் (பதிப்) தொல்காப்பியம் - பொருளதிகாரம், நச்சினார்க்கினியம், திருமகள் அழுத்தகம் சுண்ணாகம் 1948, ப.59

பார்வை நூல்கள்


1. பீ.பெரியசாமி, சங்க இலக்கியத்தில் ஆயர்கள், தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் 2020.

2. கி.ரா.வின் “கிடை” இடையர்களின் வாழ்வியல், தமிழாய்வுத்துறை தூயவளனார் கல்லூரி (தன்னாட்சி) திருச்சிராப்பள்ளி, 2023.

3. பா. ஈஸ்வரன் “கீரைாரி” நாவலில் இடையர்களின் நிலை, 2021

4. டாக்டர் அ. முத்துசாமி, சங்க இலக்கியத்தில் ஆயர், புத்தகம், தமிழிணையம் மின்னுலகம்.

5. க.கவிதா, புதிய அவையம், சங்க இலக்கிய முல்லைத்திணை மக்களின் மானுடவியல் பண்புகள்,2023 .

6. கி.ராஜ நாராயணன், கிடை நாவல், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில், பதிப்பு 2022.

7. பெ. கபிலர், 2022, வரத்தாட்டுக் கீதாரிகளின் இனவரைவியல் ஓர் அறிமுகம்.

8. முனைவர் ந. மணிகண்டன், கீதாரி நாவல் வெளிப்படுத்தும் இடையர்களின் வாழ்வியலும் பண்பாட்டு மரபுகளும், புதிய அவையம், பதிப்பு 2023.

9. ப. இந்திரா, சு. தமிழ்ச்செல்வி புதினங்களில் தொழில்கள், உங்கள் நூலகம், பதிப்பு நவம்பர் 2022.

10. அ. தீபக், கலித்தொகை சுட்டும் ஏறுதழுவல், Iandian Journal Of Tamil, பதிப்பு 2024.

11. கா. சதீஸ், 2016, சங்க கால திணைக்குடில்கள், உங்கள் நூலகம்.

12. திவாகரம் (முதல் தொகுதி), பதிப்பபாசிரியர் மு.சண்முகப்பிள்ளை இ.சுந்தரமூர்த்தி, முதல் பதிப்பு 1990, இயக்குனர்,பதிப்பகம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை 600 005

13. சா.சாவித்ரி, சமூகவியல்,மோகன் பதிப்பகம், சென்னை, மு.ப 1987.

14. நாகராசன்.வி, அகநானூறு, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, 2004

15. தமிழிணையம், நற்றிணை, நியூசெஞ்சுரி பிரிண்டர்ஸ் சென்னை-606098

16. தமிழிணையம், சிலப்பதிகாரம், பா.13. 3-4.

17. நச்சினார்க்கினியர் (உரை), கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை. பதி. 1978

18. சாமிநாதையர், உ.வே. 1918, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், கமர்ஷியல் அச்சுக்கூடம் சென்னை.

19. சாமிநாதையர் உ.வே.,1935 (3ஆம்பதிப்பு), புறநானூறு, சென்னை, லாஜர்னல்அச்சுக்கூடம்.

20. சாமிநாதையர், உ.வே.,1947, குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை, மூன்றாம் பதிப்பு கபீர் அச்சுக்கூடம்

21. சுப்பிரமணியஜயர் ஏ.வி, தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் 2008.

22. சுப்பிரமணியன் க, சங்ககாலச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 1993.

23. பக்தவத்சலபாரதி, பண்பாட்டியல் நோக்கில் பண்டைத் தமிழர் சமய மரபுகள், புதுச்சேரிமொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்2011.

24. மறைமலையடிகள், முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, டி.எம். அச்சுக்கூடம், பல்லாவாரம்,1919(3 பதி) .

25. மாணிக்கம்,வ.சுப, தமிழ்க்காதல், மெய்யப்பன் பதிப்பகம் சிதம்பரம், 2002.

26. மாதையன் பெ, சங்க இலக்கியத்தில் வேளாண் சமூகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 2004.

27. மாதையன் பெ, சங்ககால இனக்குழு சமூகமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன், சென்னை , 2004.

## Reference

1. P. Periyasamy, Bishops in Sangam Literature, International Journal of Tamil Studies 2020.

2. K. Ra s "Kitai" Shepherds Life, Department of Tamil Studies, Thooyavalanar College (Autonomous), Tiruchirappalli, 2023.

3. P. Easwaran s Status in the Novel "Keerari", 2021

4. Dr. A. Muthusamy, Bishops in Sangam Literature, Book, Tamilinaiyam Minnulagam.

5. K. Kavita, Puthiya Avaiyam, Anthropological Characteristics of the People of Mullaithinai in Sangam Literature, 2023.

6. K. Raja Narayanan, Kitai Novel, Kalachuvadu Publications, Nagercoil, Edition 2022.

7. P. Kapilar, 2022, An Introduction to the Ethnography of the Varathattu Geetharis.

*8. Dr. N. Manikandan, The Life and Cultural Traditions of the Shepherds as Revealed by the Geethari Novel, New Edition 2023.*

*9. P. Indira, S. Professions in Tamil Novels, Your Library, Edition November 2022.*

*10. A. Deepak, Kalithokhi Suttum Aeruthazhuval, Indian Journal Of Tamil, Edition 2024.*

*11. K. Sathees, 2016, Sangam Era Thinaikudilla, Your Library.*

*12. Divakaram (First Volume), Editor M. Shanmugamapillai E. Sundaramoorthy, First Edition 1990, Director, Publishing House, Chennai Dental Society, Chennai 600 005*

*13. S. Savitri, Sociology, Mohan Publishing House, Chennai, M.P. 1987.*

*14. Nagarasan.V., Akananur, New Century Bookstore, Chennai, 2004*

*15. Tamilinaiyam, Natrinai, New Century Printers Chennai-606098*

*16. Tamilinaiyam, Silappathikaram, Pa.13. 3-4.*

*17. Nachinarkiniyar (Text), Kalithoaki, Society Publication, Chennai. Ed. 1978*

*18. Saminathaiyar, U.V. 1918, Patuppattu Moolamum Nachinarkiniyar Uthiyam, Commercial Printing House, Chennai.*

*19. Saminathaiyar U.V., 1935 (3rd edition), Purananoor, Chennai, LaJournal Printing House.*

*20. Saminathaiyar, U.V., 1947, Kurunthokai Moolamumum Uthiyam, Chennai, Third Edition Kabir Printing House*

*21. Subramania Iyer A.V., The Development of Tamil Research, Meiyappan Publishing House, Chidambaram 2008.*

*22. Subramaniam K., Sangamala Society, New Century Book House, Chennai 1993.*

*23. Bhaktavatsalabharathi, Ancient Tamil Religious Traditions from a Cultural Perspective, Puducherry Linguistic and Cultural Research Institute 2011.*

*24. Maraimalaiyadigal, Mullaippattu Research, T.M. Press, Pallavaram, 1919 (3 editions).*

*25. Manickam, V. Suba, Tamil Romance, Meiyappan Publishing House Chidambaram, 2002.*

*26. Madhayan P., Agricultural Society in Sangam Literature, New Century Book House, Chennai 2004.*

*27. Madhayan P., Sangam Era Ethnic Group Society and State Formation, Pavai Publication, Chennai, 2004.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com